
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 8 ஆகஸ்ட் 2009



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 230603, 98427 - 30382, 99655 - 30385

E-Mail : Kangayamcofc@eth.net.

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# 12 - ம் வேதாகம கருத்தரங்கம்

**நாள் : அக்டோபர் 2, 3 – 2009**
(அரசு விடுமுறை நாட்கள்)

**நேரம் : காலை 9.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம். திருப்பூர் மாவட்டம்.

திருமறை ஆசான் வாசகர்களும், திருமறை தியானம் தொலைக்காட்சி நேயர்களும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள ஜெபத்தோடு அழைக்கிறோம்.

தொடர்புக்கு :
**98427 30382, 99655 30385, 30386**

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்துவின் சபையை அடையாளம் காண்பது எப்படி? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 22
6. அப்போஸ்தலருடைய நடபடிகள் ........ 24
7. நாம் எல்லோரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுகிறோமா? ........ 26
8. இரத்த சாட்சிகள் ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 AUG - 2009 Issue - 8

ஆசிரியர் உரை

## எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்

**மா**தம் தவறாமல் மலர்ந்து வரும் திருமறை ஆசான் இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகப் பெருமக்களுக்கு, இவ்விதழ் பற்றிய ஓர் உண்மை இவ்வளவு காலத்துக்கு விளங்காமலிருந்திருக்காது, ஏனெனில், தேனிலும் மதுரமான தேவ வார்த்தைகளைத் தாங்கிவரும் இவ்விதழின் மணம் கடந்த 15 ஆண்டுகளாக குறிப்பிட்ட மாதத்தில் விசேஷமாக வீசி வருகிறது. ஆசானை ஆழ்ந்து படித்துப் பயன்பெற்று வரும் அருமை வாசகர்கள் பலர் இம்மணத்தைப் பல வருடங்களாக இழுத்து உள்வாங்கி சுவைத்து வருகின்றனர். ஒருவேளை, நீங்கள் மறதிக்குத் தோழ ராகவோ அல்லது ஆசானின் போதனை குழுமத்துக்குப் புதியவராகவோ இருந்தால், அது என்ன அப்படி மணம் என்று கேட்கக் கூடும். சரி, சொல்கிறேன்.

தங்கள் சீரிய பக்தி வாழ்வுக்காகவும், சிறந்த நல்நடக்கைக் காகவும், பரலோகத்தின் தேவனுடைய பூமியெங்கும் உலாவும் கண்களில் பட்டு (2 நாளா 16:9), தேவனுடைய ஏவுதலின் பேரில் ஆவியானவருடைய அலங்கார வார்த்தைகளுக்கும் ஆட்பட்டு, தேவசத்தத்தை எதிரொலிக்கும் வேதாகமத்தின் பக்கங்களில் இடம் பிடித்திருந்தும் கூட, நம்மைப் போன்ற சத்தியம் விரும்பிகளால் அந்த தேவமனிதர்கள் முறையாகவும், முழுமையாகவும் மதிக்கப்படுவதில்லை. அப்படி நம்மால் அலட்சியம் செய்யப்பட்டவர்களைத் தேடிப்பிடித்து, அவர்க ளுக்கு முகவரி கொடுத்து, அவர்கள் பக்தி மேனியைச் சுத்தமாகக் கழுவி, மணம் கமழ அவர்களைத் துடைத்து, உங்கள் முன் கடந்த காலங்களில் நிறுத்தி வந்திருக்கிறோம். நீங்களும் அப்படிப் பட்டவர்களை எறிட்டு மாத்திரமல்ல, ஏற, இறங்கவும் பார்த்து, அட அப்படியா என்று வியந்து மெச்சியிருக்கிறீர்கள். அவர்கள் எல்லோரையும் உங்கள் முன் நிறுத்த இங்கே எனக்கு இடமில்லை.

இருப்பினும், முதலாம் நபரையும், கடைசி ஆளையும் உங்களுக்கு அடையாளம் காண்பிக்கிறேன். அவர்கள், வீரத்தின் விளைநிலமான சம்மா (1சாமு 16:9) மற்றும் செலோத்தியனாகிய சீமோன் (லூக் 6:15, அப் 1:13). இப்படிப்பட்ட தேவ மனிதர்களை நாம் அதிகம் நினைப்பது மில்லை, பேதுவது மில்லை, கேட்பது மில்லை.

சரி, இவ்வருடம் இவ்வரிசையில் இடம் பிடித்து, நம் மனதை மணத்தால் மகிழ்விக்க இருப்பவன் எபெத்மெலேக். இவ்வார்த்தையைப் படித்தவுடன், இது ஒரு நபரின் பெயரா அல்லது ஊரின் பெயரா என்ற சந்தேகம் வரும். அப்படித் தானே. இது ஒரு ஊரின் பேரல்ல, ஒரு நபரின் பெயர்தான் என்று உறுதியானால் கூட, யார் இவர்? எங்கும் கேட்ட மாதிரி கூடத் தெரியவில்லையே என்று எண்ணவும் தோன்றும். உண்மை தானே! ஆம், நம்மில் அநேகருக்கு இவன் அந்நியனே. வேத அறிவு கொஞ்சம் உள்ளவர்கள், அப்படியே கொஞ்சம் தங்கள் நினைவளைக் கசக்கி, ஆபிரகாம், ஈசாக்கு இவர்களுடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அபிலேக்கைத் தெரியும் (ஆதி 20:2,3). மோவாபுக்குப் பஞ்சம் பிழைக்கப் போன எலிமலேக் பற்றியும் படித்திருக்கிறேன் (ரூத் 1:2,3). இன்னும் சாமுவேல் தீர்க்கனுடைய நாட்களில், பிரதான ஆசாரியனாக இருந்த அகிமலேக் பற்றி கூட (1 சாமு 21:1) கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறது. ஆனால், இந்த "லேக்கு" பற்றி சுத்தமாக ஒன்றும் பிடிபடவில்லையே என்பது புரிகிறது. என்ன செய்வது? ஏதோ உங்களுக்கு மட்டும் இவன் ஒரு புதிர் என்று எண்ணி அங்கலாய்க்க வேண்டாம். கிட்டத்தட்ட முக்காலே மூணு வீசம் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இவன் ஒரு புதிராகவே இருப்பான்.

ஏனென்றால், இந்த எபெத்மெலேக் போன்றவர்களை எல்லாம் யாரும் கண்டு கொள்வதே இல்லை. பழைய, புதிய ஏற்பாடுகளில் இருக்கும் பிரபலங்களை தேவைக்கேற்றாற் போல் புரட்டி எடுத்தாலே போதும், இவர்களைப் பற்றியெல்லாம் நாம் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டுமென்று இருசாராரும், அதாவது பேசுவோரும், பேசக் கேட்போரும் அப்படியே ஒதுக்கி விடுகிறார்கள்.

ஒட்டுமொத்த கிறிஸ்தவத்தின் போக்கு ஒருவேளை இப்படியாக இருந்தாலும், ஆசானின் வழி வந்த நாம், இப் பொதுக் கருத்திலிருந்து சற்று விலகி, இந்த எபெத்மெலேக்கை தோண்டியெடுத்து மணம் வீச வைக்க முயன்று பார்ப்போம்.

அதற்கு முன்பாக, நமது ஒழுங்கின்படி, இவன் பற்றித் தெரிந்து கொள்ளத் தேவையான பின்னணித் தகவல்களைச் சேகரிக்க முயற்சிப்போம். சரியா?

இரண்டு கோத்திரங்களை உள்ளடக்கிய தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் இருண்ட காலத்தில் பாடுகளுக்கும், சாவல்களுக்கும், கொலை மிரட்டல்களுக்கும் இடையே தீர்க்க தரிசன ஊழியத்தைத் தொய்வின்றிச் செய்த மிகப் பெரிய தீர்க்கன் எரேமியா. எருசலேமிலிருந்து ஒரு மூன்று மைல் தூரத்தில் இருந்த ஆசாரிய கிராமமாகிய ஆனதோத் ஊரைச் சேர்ந்தவன் இந்த எரேமியா யூதாவை ஆண்ட கடைசி நல்ல ராஜாவாகிய

யோசியா மேற்கொண்ட மார்க்க சீர்திருத்தக் காரியங்கள், ஜனங்களின் விடாப்பிடியான ஆன்மீக அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மனந்திரும்ப மறுத்து, கர்த்தரின் எச்சரிப்புகளுக்கு எதிர்த்து நின்ற யூதாவின் மக்களை எரேமியாவின் சம்மட்டி அடி வார்த்தைகள் ஏன் என்று கூடக் கேட்கவில்லை. மாறாக, கள்ளத் தீர்க்கதரிசிகளின் வார்த்தை களுக்குச் செவிமடுத்து, எரேமியாவின் தீர்க்க தரிசன ஊழியத்தை எதிர்த்து அலட்சியம் செய்தனர்.

ஆனால், எது பற்றியும் கவலைப்படாமல், கொண்ட கொள்கையில் உறுதி காட்டித் தன் தேவப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டான் இந்த எரேமியா. எரேமியா தேவப் பணிக்காக் எதிர்கொண்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கால்களைத் தொழுமரத்தில் மாட்டி சிறை வைக்கப்பட்டார். கள்ளத் தீர்க்க தரிசி அனனியாவால் அடித்து அவமதிக்கப்பட்டார் (28:10-12) நிலவறையில் சிறை வைக்கப்பட்டார் (எரே.37:16). இன்னும் தண்ணீரற்ற கிணற்றில் தூக்கி எறியப்பட்டார் (38:9). இப்படிப்பட்ட ஒரு தீர்க்கனின் போராட்ட காலத்தில் வாழ்ந்தவன் தான் இந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக். இவர் பற்றி, புலம்பல் தீர்க்கனாகிய எரேமியா நமக்கு கூடுதலான தகவல்களை ஏனோ கொடுக்கவில்லை. காரணம் நமக்குத் தெரியாது. அதே நேரத்தில், தன் நூலின் இரண்டு இடங்களில், ஆவியானவரின் ஏவுதலால் குறிப்பிட்ட வசனங்களில் இந்த சிறப்புக்குரிய மனிதன் பற்றிக் குறிப்பிடாமலும் இருக்கவில்லை. (எரேமியா 38:7-13, 39:15-18)

இந்தக் கொஞ்ச வசனங்கள், இவன் பற்றி சில உருப்படி யான தகவல்களை நமக்குப் போதுமான அளவு கொடுக்கிற தாகவே உள்ளது. அவை *முதலாவது,* இவன் ஒரு எத்தியோப்பியன். *இரண்டாவது,* இவன் ஒரு எத்தியோப்பி யனாக இருந்தாலும், எருசலேமிருந்த ராஜாவின் பிரதானிகளில் ஒருவன். *மூன்றாவது,* எரேமியாவை ராஜாவின் அனுமதியோடு துரவில் தூக்கி எறிந்த பிரபுகளுக்கு எதிராக ராஜாவிடம் துணிந்து சென்று புகார் செய்தவன். *நான்காவது,* கர்த்தருடைய தீர்க்கனா கிய எரேமியா பட்டினியால் சாவானே என்று இரக்கம் கொண்டு ராஜாவிடம் மன்றாடியவன். *ஐந்தாவது,* எரேமியாவுக்கு ஆதரவாக ராஜாவின் உத்திரவைப் பெற்றவன். *ஆறாவது* துரவிலே துவண்ட நிலையில் இருந்த எரேமியாவைத் தீயணைப்புத் துறையின் உதவியில்லாமல் சாதுரியமாகத் தூக்கி எடுத்தவன் (38:11,12) *ஏழாவது* தேவ ஆசீர்வாதத்தை எரேமியாவின் வாயிலிருந்து வாக்காகப் பெற்றவன். "நீ போய், எத்தியோப்பியனாகிய எபெத்லேக்குக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால்", இதோ, என்னுடைய வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மையாக அல்ல, தீமையாகவே வரப் பண்ணுவேன்; அவைகள் அந்நாளிலே உன் கண்களுக்கு முன்பாக நிறைவேறும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் அந்நாளிலே உன்னைத் தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக்கொடுக்கப் படுவதில்லை.

உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (39:16-18)

இப்படி நமக்கு இந்த எபெத்மெலேக் பற்றி ஆவியானவர் கொடுத்திருக்கும் தகவல்களைக் கொண்டு, இவன் மூலம் நமக்குக் கடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. எபெத்மெலேக் உண்மையைக் கண்டு ஏற்றுக் கொண்டான்:

நம்மால் இவ்வளவு காலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த எபெத்மெலேக் நமக்குச் சொல்லிக் கொடுக்கும் முதல் பாடம், எந்தச் சூழ்நிலையிலும் உண்மைக்குத் தலைப்படவேண்டுமென்பது.

இந்த எந்தியோப்பினாகிய எபெத்மெலேக் வாழ்ந்த காலம், எது உண்மை, எது பொய் என்று எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு காலகட்டம். ஆன்மீக அலங்கோலத்தின் உச்சியில் இருந்தது சமுதாயம். தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவில் பிறந்து, மோசேயின் பிரமாணத்தின்படி வாழ வாய்ப்பு பெற்று வளர்ந்தவர்களே உண்மையான தீர்க்கதரிசியைத் தள்ளிவிட்டு தப்புக்குத் தாளம் போட்ட காலம். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் வாழ்ந்திருந்தாலும், மோசேயின் பிரமாணங்களை அதிகம் அறியாத பின்னணி கொண்டவனாக இருந்தாலும், உண்மையான தேவ வார்த்தை யாருடைய வாயிலிருந்து வருகிறது என்பதைக் கண்டு கொண்டான்.

எப்படியெனில், அந்நாட்களில், கிபியோன் ஊரானாகிய அனனியா என்ற பொய்த் தீர்க்கன், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் "பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து எடுத்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் *இரண்டு வருட காலத்திலே* இவ்விடத்துக்குத் திரும்ப கொண்டு வரப் பண்ணுவேன்" (எரே 28:2,3) என்று தீர்க்கதரிசனம் உரைத்தான். ஆனால், இது உண்மைக்கு மாறானது. எப்படியெனில், பாபிலோனிலே *எழுபது வருடம்* நிறைவேறின பின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்கு திரும்பி வரப் பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (29:10) என்று எரேமியா உரைத்திருக்கிறார்.

தேசத்தின் குடிகளெல்லாம், பிரபுக்கள் உட்பட எழுபது வருடங்களுடன் ஒப்பிடும்போது, இரண்டு வருடங்கள் என்பது கொஞ்ச காலமாக இருந்தபடியால், அதை ஏற்றுக் கொண்டு எரேமியாவை எதிர்த்தனர். ஆனால், இந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் எரேமியாவின் பக்கம் நின்று பக்தியாக காரியமாற்றியுள்ளான். அதாவது, எரேமியாவின் வாயிலிருந்து வருவது தேவ வார்த்தைகளா அல்லது வெற்று வார்த்தைகளா என்பதை சீர் தூக்கிக் கண்டுபிடித்து எற்றுக் கொண்டான்.

அருமையானவர்களே, நம்மில் எத்தனை பேருக்கு இப்பண்பு உள்ளது? வெகுஜன அபிப்பிராயத்துக்கு "ஜே" போடுகிறவர்களாகத் தானே இன்றைக்கும் உள்ளோம்? ராஜாவும், பிரபுக்களும் உட்பட ஒட்டுமொத்த தேசமே எரேமியாவைப் பொய்யன் என்று ஒதுக்கிய போது, இல்லையில்லை, அவன்தான் சரியானவன் என்று கண்டுபிடித்து, ஏற்றுக் கொள்வது என்ன அவ்வளவு சுலபமானதா? ஆனாலும், இந்த எபெத்மெலேக் இதைச் சாதித்துள்ளான்! இத்தனைக்கும், தீமை செய்யத் திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக (யாத் 23:2) என்ற மோசேயின் வார்த்தைகளை பெருமை பேசித்திரியும் யூதர்கள் மறந்து போன நிலையில், இந்த எத்தியோப்பியன் எந்த போதனையும் இல்லாமல் மோசேயின் பிரமாணத்தின்படி நடந்துள்ளான். அதுமாத்திரமல்ல, எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் (1 தெச. 5:21) என்ற பவுலடியாரின் வார்த்தை களின் உண்மையும் அவனுக்கு அன்றைக்கே புரிந்திருக்கிறது.

ஆனால், எத்தியோப்பியனுக்குத் தெரிந்த இந்த பாரபட்சமற்ற அணுகுமுறை இன்றளவும் நம்முடைய மண்டையில் ஏனோ ஏற மறுக்கிறது. நான் இப்படிக் கடுமையாக எழுதுவதற்கு தயவாய் என்னை மன்னியுங்கள். ஏனெனில், கிறிஸ்தவத்தின் யதார்த்த நிலை அப்படித் தான் இருக்கிறது. கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் (யோவா 12:48) கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய தேவ வார்த்தைகளைப் பேசும் எரேமியா போன்ற தேவ ஊழியர்கள் புறம் தள்ளப்பட்டு, அனனியா போன்ற பொய்த் தீர்க்க தரிசிகளுக்கு படுஜோரான வரவேற்பு கிடைக்கிறது. "ஜனத்தின் காயங்களை, மேற்பூச்சாய்க் குணமாக்குகிற" (எரே. 6:14) தீர்க்கதரிசிகளுக்கு ஜனங்கள் பலமான வரவேற்பு கொடுத்து, தலைக்கு மேல் தூக்கி வைத்து ஆட்டம் போடுகின்றனர். என்ன காரணம்?

ஜனங்களுக்கு 70 ஆண்டுகள் அடிமைத்தனம் என்ற உண்மை பிடிப்பதில்லை. மாறாக, இரண்டு ஆண்டுகள் என்னும் பொய் ரொம்பப் பிடிக்கிறது. தேவன், பாபிலோனின் நுகத்தை முறிக்காத நிலையிலும், கர்த்தர் முறித்து விட்டார் என்பதைக் கேட்க ஜனங்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். இதினிமித்தமாகத் தான், இப்படிப்பட்ட பிரசங்கிகளுக்கு ஆயிரக்கணக்கில் கூட்டம் சேர்ந்து, இலட்சக்கணக்கில் வருமானமும் கிடைக்கிறது. அன்பானவர்களே! இது மிகவும் தவறான போக்கு. இப்போக்கிற்குக் கிறிஸ்தவம் உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து சத்தியத்தை ஏற்றுக் கொள்வது அவசியம். இக்காரியத்தில் இந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் நம்மெல்லோருக்கும் முன்னுதாரணமாக உள்ளார்.

## II. எபெத்மெலேக்கு உண்மைக்காக உறுதியாக நின்றான்:

நம்மால் இவ்வளவு காலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த எபெத்மெலேக் நமக்குச் சொல்லிக் கொடுக்கும் இரண்டாம் பாடம், உயிரே போனாலும் உண்மைக்காக நிற்க வேண்டுமென்பது.

எது உண்மையென்பதைக் கண்டுபிடிப்பதில் சிரமங்கள் இருந்த கால கட்டத்தில் வாழ்ந்திருந்தாலும், தன் இளம் பிராயம் முதல் மோசேயின் பிரமாணங்களை அறிந்து கொள்ளும் பாக்கியம் பெற்றிராவிட்டாலும், யாருடைய வாயிலிருந்து வருவது உண்மையானதென்பதைக் கண்டுபிடித்ததோடல்லாமல், அதற்காகத் தன் தலையையும் கொடுக்க முன் வந்திருக் கிறான். அது எப்படி என்று கேட்கிறீர்களா?

அந்நாட்களில் தேவனுடைய உண்மைத் தீர்க்கனாகிய எரேமியாவுக்கும், பொய்த் தீர்க்கர்களுக்கும் இடையே ஒரு பகிரங்கப் போர், வார்த்தைகளை ஆயுதங்களாகக் கொண்டு நடந்து கொண்டிருந்தது. தேவ ஏவுதலால் எரேமியா வெளிப் படுத்தின வார்த்தைகளின் தாக்குதல்களை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. “இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப் போகிறவனோ உயிரோடி ருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப் போலிருக்கும்; அவன் பிழைப்பா னென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும், இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக் கொடுக்கப்படும் ; அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொன்னார். (எரே 38:12) இதைக் கேட்ட பிரபுக்கள், ... இவன் ஜனங்களுடைய கைகளைத் தளர்ந்து போகச் செய்கிறான் ... இவன் ஜனத்தின் க்ஷேமத்தைத் தேடாமல், அவர்கள் கேட்டையே தேடுகிறான் என்று (38:4), ராஜாவிடம் புகார் செய்து, ராஜாவின் உத்திரவின் பேரில் எபெத்மெலேக்கை மல்கியாவின் துரவிலே போட்டார்கள் (38:6). அப்போதைய நிலைமையை தயவாய் புரிந்து கொள்ளுங்கள், ஒட்டுமொத்த யூதாவின் பிரபுக்கள் மற்றும் சர்வ அதிகாரம் கொண்ட ராஜா என்று இவர்கள் யாவரும் ஒரு பக்கமாக நின்றார்கள். கேட்பாரற்ற ஒரு அவலச் சூழல் எரேமியாவுக்கு, அதன் விளைவு உளையான துரவில் எரேமியா.

இருப்பினும், இந்தச் செய்தி எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்கிற்குத் தெரிய வந்து போது, அவன் என்ன செய்தான் என்று பாருங்கள் ! அது இருக்கட்டும், அந்த இடத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? என்ன செய்வது, பிரபுக்கள் எல்லோரும் யூதர்கள், ராஜாவும், ஆட்சியும் அவர்களுடையது. நானோ அந்நியன். தனி ஒருவனாக நான் என்ன செய்ய முடியும்? என் நிலைமை கடவுளுக்கே தெரியும் என்று சொல்லி, நம்முடைய கையாலாகத் தனத்திற்குக் கடவுளையும் துணைக்குச் சேர்த்துக் கொள்வோம். அப்படித்தானே ! ஆனால், இந்த எபெத்மெலேக் தன்னைப் பற்றிக் கவலைப்படாமல், சூழ்நிலையை காரணமாகக் காட்டித் தப்பிக்க முயற்சிக்காமல் உடனடியாகச் செயலில் இறங்கினான். ஒட்டு மொத்த பிரபுக்களின் சதிக்கும், ராஜாவின் உத்திரவுக்கும் எதிராக, மனித உரிமைக் கழகங்கள் இல்லாத அந்த நாட்களில் பேசுவதென்பது உயிருக்கே உலை வைக்கக் கூடியது. ஆனால், எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியத்தை நன்றாய் அறிந்திருந்த

எபெத்மெலேக், என்னைப் பற்றி எனக்கு கவலை இல்லை. ஆனால், தேவ வார்த்தைகளை வெளிப்படுத்தின உண்மை தீர்க்கன் எரேமியா காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் குறியாக இருந்தான்.

ஆகவே தான், பெனியமீன் வாசலண்டைக்கு ஓடோடிச் சென்று, எரேமியாவைத் துரவில் போட்டது, *தகாத செய்கை* என்று கூறினான் (38:9). இத்தனைக்கும், எரேமியாவுக்கு எதிரான பிரபுக்களின் சதிக்கு, ராஜாவின் அங்கீகாரமும் கிடைத்ததென்பது இவனுக்குத் தெரிந்து தான் இருந்திருக்கும். இருப்பினும், ராஜாவின் முகத்துக்கு நேராக, ராஜாவே, நீர் செய்தது தகாத செய்கை என்று எங்கிருந்தோ வந்த இந்த எத்தியோப்பியன் நெத்தியடியாய் அடித்தான். அந்நாட்களில் இப்படிச் செயல்படுவதற்கு எவ்வளவு நெஞ்சுரமும், துணிவும், தேவன் மீது நம்பிக்கையும் வேண்டும் தெரியுமா?

அருமையானவர்களே, உண்மைக்காக நிற்கிற காரியத்தில் நாமெல்லாரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசிக்கு ஊறு நேர்ந்து விடக் கூடாது, ஓர் உண்மை தீர்க்கனின் வார்த்தைகள் அடங்கிப் போய் விடக்கூடாது என்பதில் அந்த எபெத்மெலேக் எவ்வளவு கவனமாக இருந்திருக்கிறான் பாருங்கள்! நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் உண்மை சத்தியத்திற்கு என்ன மரியாதை கொடுக்கிறோம்? இன்றைய கிறிஸ்தவத்திற்கு எது சத்தியம் என்பதிலேயே இன்னும் தெளிவு இல்லாமலிருக்கிறது. கெத்சமனேயில் இயேசு உருக்கமாயும், ஊக்கமாகவும் செய்த ஜெபத்தில் "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்த மாக்கும். உம்முடைய வசனமே சத்தியம் என்றார்". (யோவா 17:17) இயேசுவின் வார்த்தைப்படி வசனம் தான் சத்தியம் என்றால், அந்த வசனத்திற்காக நாம் ஒவ்வொருவரும் நிற்க வேண்டும். யூதா ஆசிரியர், ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்றல்லவா கூறுகிறார்... (யூதா 3)

ஆனால், இன்றைக்கு என்ன நடக்கிறது? கிறிஸ்துவின் வசனங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டுக்கான முக்கியத்துவம் குறைந்து, உணர்வுப்பூர்வமான காரியங்களுக்கும், ஆட்டம் பாட்டங்களுக்கும் அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எங்களுக்கு 70 ஆண்டுகளைக் குறித்துப் பேச வேண்டாம். இரண்டு ஆண்டுகளைக் குறித்துப் பேசினால் போதும் என்று பிரசங்கிகள் மிரட்டிப் பணிய வைக்கப்படு கிறார்கள். பிரசங்கிகளும், வெகுஜன ஆதரவையும், ஆதாயத் தையும் கருதி பெட்டிப் பாம்பாய் அடங்கி விடுகிறார்கள்.

அன்பானவர்களே, உண்மையான சத்தியத்திற்காக, உண்மையான சபைக்காக, உண்மையான ஆராதனைக்காக, உண்மையான பக்தி வாழ்வுக்காக எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ளக்கூடிய எபெத்மெலேக்குகள் தான் இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவையாக உள்ளது. இதை வாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் இக்காரியத்தில் ஒரு எபெத்மெலேக்காக மாற உங்களிடம் மன்றாடுகிறேன்.

## III. எபெத்மெலேக் உண்மைக்கான ஆசீர்வாதம் பெற்றான் :

நம்மால் இவ்வளவு காலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த எபெத்மெலேக் நமக்கு கற்றுக் கொடுக்கும் இன்னுமொரு பாடம், உண்மைக்கான ஆசீர்வாதத்தைத் தேவன் கண்டிப்பாகத் தருகிறார் என்பது.

தான் ஒரு அந்நியனாக இருந்த நிலையிலும், எது தேவனுடைய வார்த்தை, எது மனிதனுடைய வார்த்தை என்பதைக் கண்டு, ஏற்றுக் கொண்டு, அதற்காக எந்த தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருந்தவனைப் பரலோகத்தின் தேவன் சும்மாவிடவில்லை. யாருக்கு இவன் ஆதரவுக்கரம் நீட்டினானோ அதே எரேமியாவைக் கொண்டு இவ்விதம் சொல்லியுள்ளார். "ஆனால் அந்நாளிலே உன்னைத் தப்பு விப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கே இரையாவதில்லை ; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (எரே 39:17,18). இங்கே கவனியுங்கள், தேவன் இந்த எத்தியோப்பியனைப் பார்த்துச் சொல்கிறார், *நீ என்னை நம்பினபடியால் என்று*. தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டு வேத எழுத்துக்களையும், அது தரும் வாக்குத் தத்தங்களையும், ஆரம்பம் முதல் பெற்ற ஒரு தேசமே, தேவனை நம்ப மறுத்த போது, எங்கிருந்தோ வந்த இந்த எத்தியோப்பியன் தேவனை நம்பியுள்ளான் ; இப்படி தேவனை, அவருடைய வார்த்தைகளின்படி நம்பின எபெத்மெலேக்கை தேவன் மறக்கவில்லை. "உன்னைத் தப்புவிப்பேன், உன்னை விடுவிப்பேன் என்று கூறுகிறார்". ஆம், ராஜா உட்பட ஒரு பட்டணத்துக்கு ஆபத்து வந்த போது, ராகாப் (யோசு 6:23) காப்பாற்றப்பட்டது போல, இவனும் காப்பாற்றப்பட்டான். தாவீதும் தன் சங்கீதத்தில் இக்கருத்தை உறுதி செய்கிறார். கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை விடுவிப்பார்; அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார் (சங் 37:40).

இந்த எபெத்மெலேக்கிள் வாழ்க்கையிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? கர்த்தரை உண்மையாக நம்புகிறவர்களை தேவன் காப்பாற்றி இரட்சிக்கிறார். அவர்கள் தீங்கைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் ஒரு போதும் இல்லை. எபெத் மெலேக் கர்த்தரை நம்பினான் என்று வசனம் சொல்லுகிறது. அவன் கர்த்தரை எப்படி நம்பினான்? கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளை நம்பினான். ஏராளமான வர்கள் நம்ப மறுத்த ஒரு கால கட்டத்தில், ஒரு வேளை அந்த வார்த்தைகள் இதயத்திற்கு இதமாக இல்லாத நிலையிலும் அவைகளை நம்பினான். கர்த்தரை நம்புவது என்பதின் பொருள், கர்த்தருடைய வார்த்தைகளை நம்புவது தான்.

அப்படியானால், இன்றைக்கு நாம் நம்பும்படியான கர்த்தருடைய வார்த்தைகள் எது? எதை நம்பினால் நமக்குக் கர்த்தருடைய பாதுகாப்பும், ஆசீர்வாதமும் கிடைக்கும்? எவ்வித சந்தேகமுமில்லாமல் கிறிஸ்துவின் வார்த்தைகள் தான். ஏனெனில், நாம் வாழும் இந்தக் கடைசி நாட்களில் தேவன் குமாரன் மூலமாகத் தான் திருவுளம்பற்றியுள்ளார் (எபி.1:2).

ஆகவே தான், இயேசுவானவர், என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவா 14:26) என்றார். இதனிமித்தம் தான், இயேசுவானவர், நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும் என்றார். (யோவா 12:48). இப்பொழுது தெரிகிறதா? நாம் எந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று.

அருமையானவர்களே, இதுதான் உண்மை என்றால், நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் யாருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டிருக்கிறோம்? நாம் செய்கின்ற ஒவ்வொன்றுக்கும் புதிய ஏற்பாட்டின் அங்கீகாரம் இருக்கிறதா? அப்போஸ்தலன் யோவானைக் கொண்டு ஆவியானவர் சொல்லுவது உங்களுக்கு நினைவிலிருக்கிறதா? “கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிற வனோ பிதாவையும், குமாரனையும் உடையவன்” (II யோவான் 9) என்று. கிறிஸ்துவின் உபதேசத்தில் நடந்து நாம் தேவனை உடையவர்களாக இல்லாவிட்டால், தேவன் நம்மைப் பாதுகாக்கவோ, ஆசீர்வதிக்கவோ மாட்டார்.

அன்றைக்கு எபெத்மெலேக், தேவனுடைய பாதுகாப்பை யும், ஆசீர்வாதத்தையும், எரேமியாவைக் கொண்டு தேவன் பேசின வார்த்தைகளை நம்பிப் பெற்றுக் கொண்டான் என்பதை நீங்கள் மறக்க வேண்டும். இன்றைக்கு அதே தேவன், கிறிஸ்துவைக் கொண்டு பேசியுள்ள புதிய ஏற்பாட்டு வார்த்தைகளை விசுவாசித்து, கீழ்ப்படிந்து, பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். வேறு குறுக்கு வழி கிடையாது. கள்ளத் தீர்க்கதரிசியாகிய அனனியாவைக் கொண்டு குறுக்கு வழி தேடிய மக்கள் பாபிலோனியர்களால் அழிக்கப் பட்டது போல, கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாறாகக் குறுக்கு வழி தேடினால் நாமும் நித்திய காலத்துக்கும் அழிக்கப் படுவோம்.

ஆகையால், இந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் கைக் கொண்டு நாம் கற்ற மூன்று பாடங்களை மறவாமல், தேவனுடைய நித்திய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள நம்மை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கு ஒப்புக் கொடுப்போமாக! ஆமென்.

S. ராஜநாயகம்

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

## காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும் எக்லீசியா வேதாகமக் கல்லூரியும் இணைந்து நடத்தும்

# பன்னிரண்டாம் வேதாகம கருத்தரங்கம்

# TWELVETH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 2,3 - 2009**
**(வெள்ளி, சனி - அரசு விடுமுறை நாட்கள்)**

நேரம் : **வெள்ளி காலை 9:00 - மாலை 4:30 மணி வரை**
**சனி காலை 9:00 - 12:30 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.**

**பேச்சாளர்கள் : தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி**

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382, 99655 - 303857

# கிறிஸ்துவின் சபையை அடையாளம் காண்பது எப்படி?

நாம் இப்போது "கிறிஸ்துவின் சபையை அடையாளம் காண்பது எப்படி?" என்று பார்க்க உள்ளோம்.

முதலாவது, வேதாகமத்திலிருந்து, சபையைக் குறித்து, நாம் ஒவ்வொருவரும் வாசித்தறிந்து கொள்ளமுடியுமென்பதை திட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நாம் அடையாளம் கண்டு கொள்ளவும் முடியும். எல்லா மார்க்க கூட்டங்களிலிருந்தும் அதை வேறுபடுத்திக் காட்டக்கூடிய சில அடையாளங்கள் அங்கே உள்ளது. உதாரணமாக, நீங்கள் ஏதாவது ஒரு சபையில் அங்கமாக இருந்தால் அல்லது உங்களைச் சுற்றிலுமிருக்கும் சபையை நீங்கள் கவனித்தால், வேதாகமத்தில் சொல்லப் பட்டுள்ள சபையின் அடையாளங்களோடு, நீங்கள் சென்று கொண்டிருக்கும் சபை அல்லது மற்ற சபைகளோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அது உண்மையாகவே கிறிஸ்துவின் சபையா அல்லது போலியானதா என்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஒரு சபையில் அங்கமாக இருப்பது, என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப்போகிறதென்பதை அறிந்து கொள்ள நீங்கள் விரும்பலாம். சபை முக்கியமானதல்லவென்றும், சபை ஒருவனை இரட்சிக்காது என்றும், எந்த சபையிலும் அங்கமாக இல்லாமலே ஒருவன் பரலோகம் செல்ல முடியமென்றும் நீங்கள் வாதிடலாம். இந்த வாதம் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. உண்மையில், இது ஒரு சத்தற்ற வாதம். சபையானது முக்கியமற்றதாக இருக்குமானால், அல்லது எல்லா சபைகளும் ஒன்று என்றால், பின் எதற்காக கர்த்தர் தன் உயிரையே ஒரு சபைக்காகக் கொடுத்து, தன்னுடைய சபையை இந்தப் பூமியில் கட்டினார். சபை ஒருவனை இரட்சிக்காது என்பது உண்மை. ஏனெனில், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் தான் சபையாகும். ஆனால், கிறிஸ்து இரட்சகராக இருக்கிறபடியால், ஒருவன் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்வதற்கு, அவர் இரட்சகராக உள்ள சபையில் அங்கமாக இருக்க வேண்டியது அவசியம்.

இக்காரியத்தை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள, வேதாகமத்திற்குச் சென்று சபையின் அடையாளங்களை அறிந்து கொள்வோம். வெகுகாலத்துக்கு முன்பே, தேவனுடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தமது ராஜ்ஜியம் அல்லது சபையை ஸ்தாபிக்கும் நாளைக் குறித்துப் பேசியுள்ளனர். ஏசாயா தீர்க்கதரிசி இப்படிக் கூறியுள்ளார். "திரளான ஜனங்கள்

புறப்பட்டு வந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (ஏசா.2:2,3) யோவேல் தீர்க்கதரிசியும் இந்தவிதமாக எழுதியுள்ளார். "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்வார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங் களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28,29) தொடர்ந்து தானியேலும் இப்படி சொல்லியுள்ளார். "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் (தானி. 2:44)

தேவனுடைய இந்த தீர்க்கதரிசிகளெல்லாம் என்ன சொல்கிறார்கள்? அவர்களனைவரும் ஏகோபித்த குரலில், கர்த்தருடைய ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபை தோற்றுவிக்கப் படும் என்று சொல்லியுள்ளனர். இது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படுமென்றும், அங்கிருந்து கர்த்தருடைய வசனம் உலகெங்கும் போகுமென்றும் உள்ளது. இது ஆவியின் பலத்தோடு வருமென்றும், இது ஒருபோதும் அழியாததென்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்றும் சொல்லப்பட் டுள்ளதை நாம் காணமுடிகிறது.

இவைகள் அனைத்தும், கனகச்சிதமாக நிறைவேறி யுள்ளது. எருசலேம் பட்டணத்தில் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி சபையாக தோற்றுவிக்கப்பட்டு, நற்செய்தியானது உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த நாளிலே தானே, சபையானது

கட்டப்பட்டது. அந்நாள் முதல், சபையானது இருந்து கொண்டுள்ளது. கிறிஸ்துவின் வருகை மட்டும் அது நிலைத்திருக்கும். இயேசு தமது சபையைக் கட்டுவேனென்று சொன்னார். (மத்.16:18) அப்போஸ்தலர்களின் உதவியோடு, தான் சொன்னபடியே அதைச் செய்தார். அவர்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழிநடத்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். (யோவா.16:13) பிறகு, பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு கொஞ்சம் முன்னதாக, அவர் இப்படிச் சொன்னார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்.1:8) சபையானது, அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதென்று நாம் வாசிக்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தது போல, கர்த்தருடைய சபை அல்லது இராஜ்ஜியம் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று பெயர் முதலாய் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய வசனம் இந்த பட்டணத்திலிருந்து எல்லா இடங்களுக்கும் போதுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் பார்த்து, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுக்கிருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கூறியுள்ளார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில் திரளான ஜனக் கூட்டத்திற்கு பிரசங்கித்ததற்குப் பிறகு பிரசங்கத்தைக் கேட்டவர்களின் இருதயங்கள் குத்தப்பட்டு நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்ட பொழுது, “பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்று சொன்னான். அன்றைக்கு மூவாயிரம் பேர் அதின்படி செய்தனர். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்தார். (அப்.2:47)

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளில், நற்செய்தி அறிவிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் 2 ல் நாம் வாசிக்கிறோம். பெந்தெகொஸ்தே பண்டிகை வாரத்தின் முதல் நாளில் வந்தது. இவைகளனைத்தும் தோராயமாக கி.பி. 33 ல் நடந்தேறியது.

அப்போஸ்தலர்கள், கூடியிருந்தவர்களின் பற்பல பாஷைகளில் பேசும்படியாகவும், தாங்கள் தேவனுடையவர்கள் என்று அவர்கள் நம்பும்படி அற்புதங்கள் நடப்பிக்கும் படியாகவும், தாங்கள் சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழி நடத்தும்படியாகவும், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றனர். (அப். 1:8, 2:1-4,8).

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், சபையென்பது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டதாக இருந்தது. (அப்.2:41,47) இது உண்மை யானால், சபையென்பது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவும், கிறிஸ்து அதற்குத் தலையாகவும் இருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலன் பவுல், "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியர் 1:22,23 யும், எபே.5:23யும் வாசியுங்கள்.

கிறிஸ்துவின் இரத்தத்தாலே சபையானது வாங்கப்பட்டது. எபேசுவிலிருந்த மூப்பர்களுக்கு பவுல் கூறும்போது, ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியருக்கு எழுதின போது கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக் கிறார் என்றும் கூறியுள்ளார். கிறிஸ்து சபைக்காக தன் உயிரைக் கொடுத்து மரித்து அதற்கு இரட்சகராகவும் இருக்கிறா ரென்றால், அதன் பொருள் என்ன? கிறிஸ்து மிக அதிகமான முக்கியத்துவத்தை சபைக்கு கொடுத்திருக்கிறாரென்பதுதானே. கிறிஸ்து சபைக்கு அஸ்திபாரமாக இருப்பாரென்று சொல்லப் பட்டுள்ளது. பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டதற்குப் பிறகு அவர்கள் செய்த அறிக்கையின் மீது அல்லது அந்தக் கல்லின்மீது, கல்லாகிய தம்மீது தமது சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். (மத்.16:18) பவுல், போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவனாலும் கூடாது என்று கூறியுள்ளார். பேதுரு கிறிஸ்துவைக் குறித்து பிரதான மூலைக்கல் என்று குறிப்பிட்டுள்ளார் (1பேதுரு. 2:1-8)

சபையும், சபையின் அங்கத்தினர்களும், கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்கிறார்கள், கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் இரட்சிப்பில்லை (அப்.4:12) ஆங்காங்கே

உள்ள பிராந்திய சபையைக் குறித்து, வேதாகமம், கிறிஸ்துவின் சபைகள் என்று குறிப்பிடுகிறது. (ரோமர் 16:16) இது தேவனுடைய சபை என்றும் சொல்லப்பட்டுள்ளது. (அப்.20:28) கர்த்தரை கனப்படுத்தும் வேறு பெயர்களாலும் சொல்லப்பட்டுள்ளது. இதில் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். (அப்.11:26, அப்.26:28, 1பேது.4:10)

மனமாற்றம் அடைந்தவர்கள் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் படிக்கும்போது, இந்த கிறிஸ்துவின் சபைக்குள்ளாக எப்படி வருவதென்பதைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. நற்செய்தியைக் கேட்ட போது, தேவன் மீதும் கிறிஸ்து மீதும் விசுவாசம் வைத்தார்கள். பாவத்திலிருந்து மனந்திரும்பினார்கள். கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள். தங்களுடைய பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப்.2.38, 2:47).

அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்து, கர்த்தரை ஆராதித்து விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கிறிஸ்து தமது சபைக்காக திரும்ப ஒரு நாளில் வருவார் என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர் (எபே.5:27, 1 தெச 4:15-18)

ஆக, சபையானது வேதவசனங்களில் தெளிவாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது, கர்த்தருடைய சபையை நீங்கள் எப்படிக் கண்டுபிடிக்கலாம்? இப்பொழுது நாம் பார்த்த அதே அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிக்க முடியும். ஒரு சபையானது, தன்னைக் கர்த்தருடையது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு இந்த அடையாளங்கள் இல்லையானால், அது அவருடையது அல்ல, நீங்கள் இருக்கும் இடத்தில், கர்த்தருடைய சபை இல்லையானால், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்து, ஒருவரையோ அல்லது அதிகமானவர்களையோ மனமாற்றமடையச் செய்வதின் மூலம் நீங்கள் கிறிஸ்துவின் சபையை அங்கே ஆரம்பிக்க முடியும்.

**J.C. சோட்**

## தாவீது - இயேசு ஒப்பீடு

| | |
|---|---|
| 1. பெத்லகேமில் பிறந்தார் (1 சாமு 16:1) | - பெத்லகேமில் பிறந்தார் (மத் 2:4,5) |
| 2. யூதா கோத்திரம் | - யூதா கோத்திரத்துச் சிங்கம் (வெளி 5:5) |
| 3. மேய்ப்பன் | - நல்ல மேய்ப்பர் (யோவா 10:11) |
| 4. இராஜா | - இராஜாதிராஜா (1 தீமோ 6:15) |

பெண்கள் பகுதி

# இல்லை

ஒருமுறை, பத்திரிக்கை ஆசிரியர் ஒருவர் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களை அழைத்து பல கேள்விகளுக்கு பதில் சொல்லுமாறு கேட்டார். அக்கேள்விகளுள் கீழ்க்கண்ட இரண்டு கேள்விகளும் அடங்கும்.

1. பெருமளவில் தவறாக பயன்படுத்தக்கூடிய வார்த்தை எது?

2. ஆங்கில மொழியிலே அதிகமாக பயன்படும் என்று கருதக்கூடிய வார்த்தை எது?

பெரும்பாலும் அனைவராலும் தவறாக பயன்படுத்தப்படும் வார்த்தை "ஆம்" என்றும், அதிகமாக பிரயோஜனப்படும் வார்த்தை "இல்லை" என்றும் கூறினார்கள்.

"இல்லை" என்ற சொல்லை சொல்லத் தவறினதினால் இன்றைக்கு சபைகள் உடைந்தும், ஊழியர்கள் இடமாற்றம் செய்வதும், சபைக்கு ஒருவர் வருவதும், ஒருவர் போவதுமாக நிலைமை இருக்கிறது. எந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தாலும் ஒரு கூட்ட மக்களைப் பிரியப்படுத்த "ஆமாம்" என்று சொல்லும்போது கட்டாயமாக அங்கே பிரச்சனைதான் வந்து சேருகிறது. ஆரம்பத்திலேயே "இல்லை" என்று சொல்லிவிட்டால் பிரச்சனைகளை தவிர்க்கலாம்.

"இல்லை" என்பது சிறிய வார்த்தையாயிருந்தாலும் பெரிய பொருளைக் கொண்டுள்ளது. பெரிய மனிதர்கள்தான் இந்த வார்த்தையை செயல்படுத்த முடியும். "இல்லை" என்று சொல்லத் தெரியாத குணத்தைப் பெற எந்த மனிதனும் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. உலகம் முழுவதும் அறியப் பட்டிருக்கிற மாமனிதர், மிகத் தெளிவாகவும், எந்தத் தவறுமின்றி, தான் வாழ்ந்த காலத்திய சில மக்கள் செய்யத் தவறியதை தன் சொல்லால் செய்து காட்டினார். அவர் தான் இயேசு கிறிஸ்து. (மத்தேயு 4:1-11) வசனப்பகுதிகளில் தன்னை சோதித்த பிசாசுக்கு "இல்லை" என்று சவுக்கடி கொடுத்தார்.

நாமும் கூட பிசாசுக்கு "இல்லை" என்று சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப் பழகுவது நமக்கு ஒரு பலமுள்ள ஜீவியத்தை கொடுக்கும். பழைய ஏற்பாட்டில் சிம்சோன் இதற்கு உதாரணமாக திகழ்கிறான். (நியாயாதிபதிகள் 16 ம் அதிகாரம்). மீண்டும், மீண்டும், மீண்டுமாக அவன் "இல்லை", "இல்லை", "இல்லை" என்று சொன்னதினால் அவன் பலம் அவனோடவே இருந்தது. ஆனால் தெலீலாள் என்று சொல்லக்கூடிய பெண்ணின்

நெருக்குதலுக்கு பலியான சிம்சோன் "இல்லை" என்று சொல்லாமல், "ஆம்" என்று சொன்னபோது தன் பலத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தி தன் பலத்தை இழந்து போனான். இன்றைக்கும் இராட்சச மனதும், உயர்ந்த சரீரமும், அகன்ற தோள்களையும் கொண்ட மனிதர்கள் கூட "இல்லை" என்ற வார்த்தைக்கு பதிலாக "ஆம்" என்று சொல்லி தங்கள் முழு பலத்தையும், மரியாதையையும் இழந்து விட்டிருக்கிறார்கள்.

ஆதியில் ஏதேன் தோட்டத்திலேயே இப்பலவீனம் துவங்கிவிட்டது. தவற்றிற்கு "ஆமாம் சாமி" போட்டார்கள். ஆதாமும், ஏவாளும். பிறகு வெட்கப்பட்டார்கள். பிறகு தங்களை ஒளித்தார்கள். வெட்கம் - சுயமரியாதையை இழக்கச் செய்கிறது. பின்பு தானாக ஒளித்துக் கொள்ளும் சூழ்நிலை வந்து விடுகிறது. இது தலைமுறை, தலைமுறையாக தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் அவன் "இல்லை" என்ற சொல்லை பயன்படுத்தாதது தான்.

ஓர் அடிமையின் "இல்லை" என்ற சொல் அவன் எஜமானின் குடும்பத்தை காப்பாற்றியது. (ஆதி 39:7-10). யோசேப்பு அடிமையாயிருந்தான். போத்திபார் எஜமானாயிருந்தான். இளமையான, மிகவும் அழகான, திறமை வாய்ந்த யோசேப்பு தன் சகோதரர்களின் பொறாமைக்கு ஆளாகி அடிமையாக விற்கப்பட்டான். அவனுக்கே உண்டான சில விசேஷ குணநலத்தால் மதிப்பும், நம்பிக்கைக்குமுரிய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். பிறகு பார்வோனின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு தன்னோடே தகாத உறவு வைக்கத் தூண்டினாள். யோசேப்பு தன் எஜமானுக்கும், தேவனுக்கும் உண்மையுள்ளவனாய் நடந்து கொண்டான். பார்வோனின் மனைவி பழியை யோசேப்பின் மேல் போட்டு குற்றம் சாட்டினதால் சிறைக்கு தள்ளப்பட்டான். ஆனால் யோசேப்பு தோற்கடிக்கப்படவேயில்லை. தேவனுடைய உதவியால் எகிப்து முழுமைக்கும் பார்வோனுக்கு அடுத்த இரண்டாம் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டான். யோசேப்பின் வாழ்க்கையின் திருப்புமுனைக்கு காரணம் அவனது *உறுதியான "இல்லை"* என்ற சொல்தான்.

மேலும், புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய யோவான் மிகவும் கண்டிப்பாக "இல்லை" என்று சொல்லக் கூடியவர். III யோவான் 9,10,11 வசனங்களில் பார்க்கும் போது தியோத்திரேப்புவை கடுமையாக எதிர்க்கிறார். அப்போஸ்தலர் யோவான் ஆமாம் சாமி போடுகிறவர் அல்ல. அவனை கடுமையாக விமர்சித்து விட்டு, பிறகு பிரியமான காயுவுக்கு "நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று" என்று உற்சாகப்படுத்துகிறார். இதையே வேறுவகையாகச்

சொன்னால், தீமைக்கு "இல்லை" என்றும், நன்மைக்கு "ஆம்" என்றும் சொல்ல வேண்டும் என்பதை அப்போஸ்தலன் யோவான் மூலம் நாம் கற்றுக் கொள்கிறோம்.

ரோம அரசாங்கத்தின் ஆளுநராக இருந்த பிலாத்து இரத்த வெறிபிடித்த, கெர்ஜித்துக் கொண்டிருக்கும் ஜனத்திரளுக்கு முன்பாக "இல்லை" என்று சொல்ல பயந்து "ஆம்" சிலுவையில் அறையுங்கள் என்று தன் கையை கழுவி விட்டான். (மத் 27:24). ஆமாம் என்று சொன்னதினால் இன்றளவும் இவன் பெயர் இழிவான பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

"இல்லை" என்ற ஒரு சொல்தான் "ஆம்" என்ற வார்த்தைக்கு பலம் சேர்க்கிறது. இல்லை என்ற சொல்லால் நாம் ஆக்கப்பட்டாலேயொழிய "ஆம்" என்ற சொல்லுக்கு மதிப்பே இல்லை. ஒரு மனிதன் எந்த அளவு சாமார்த்தியவான் என்பதை அவன் எந்த அளவு தீமைக்கு "இல்லை" என்ற சொல்லை பயன்படுத்துகிறானோ அதை வைத்து கணித்து விடலாம். சங்கீதக்காரன் இவ்வாறு சொல்கிறான். "....எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" (சங்கீதம் 119:104). இது உண்மையிலும் உண்மை. ஏனென்றால் இவன் ஒவ்வொரு உண்மையான வழியையும் நேசித்தான்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே! அருமை யான பாடம் நமக்கு கிடைத்திருக்கிறது. தேவன் சம்பந்தமான காரியங்களுக்கு "ஆம்" என்றும், பிசாசின் காரியங்களுக்கு "இல்லை" என்றும் சொல்வோம். வேதம் பேசுவதற்கு "ஆம்" என்போம். வேதம் பேசாத இடத்தில் "இல்லை" என்போம்.

நம்முடைய ஆத்துமாக்கள் வலுவுள்ளதாயிருக்க "இல்லை" களை அதிகம் பயன்படுத்துவோம். அதன் மூலம் "ஆமா"க்களை இல்லைகளால் பலப்படுத்துவோம் - ஆமென்.

**ரேச்சல் ராஜநாயகம்**

**வேத வசனத்தைப் படிக்கும்போது நம் மனநிலை இவ்வாறு இருக்க வேண்டும்.**

1. பசிதாகமுள்ளவராக இருக்க வேண்டும். [மத் 5:6]
2. நம்பிக்கையோடு படிக்க வேண்டும். [I பேதுரு 3:15]
3. உண்மையும் நன்மையுமான இருதயமுள்ளவராயிருக்க வேண்டும் [லூக் 8:15]
4. பொறுமையுடன் இருக்க வேண்டும் [லூக் 8:15, எபி. 12:1]

# வாலிபனே! எங்கே போகிறாய்..?

வாலிப நெஞ்சங்களுக்கு இயேசுவின் நாமத்தில் இனிய நல்வாழ்த்துக்கள்! ஒரு மனிதன் எவ்வழியில் நடக்கின்றான் என்பதை வைத்து, அவன் எங்கே போகின்றான், அவ்வழியின் முடிவு என்ன? என்பதைச் சொல்லிவிட முடியும். அவன் ஒளியின் பாதையில் நடக்கிறானா? அல்லது இருளின் பாதையில் நடக்கிறானா என்பதை அறிந்து அவனுடைய முடிவு என்ன? அது சமாதானமா, சஞ்சலமா என்பதையும் அறிந்து கொள்ள முடியும் ஆகவே, வாலிபர்களே நீங்கள் அடியெடுத்து வைத்துள்ள பாதை ஜீவ வழியா, மரண வழியா என்பதை அறிந்து கொள்ள ஆராய்ந்து பார்ப்போம்.

**I மரண வழி :** - தேவன் மனுஷனுக்கு முன்பாக இரண்டு வழிகளை வைத்துள்ளார் 1) ஜீவ வழி 2) மரணவழி (எரே. 21:8) நீதியைச் செய்கிறவன் ஜீவ வழியிலும், பாவம் செய்கிறவன் மரணவழியிலும் நடக்கின்றான். ஆம், பிரியமான வர்களே மனிதன் பாவம் செய்தவுடனே அவன் மரண வழியிலே அடியெடுத்து வைக்கிறான். ஆனாலும், சர்வவல்ல தேவன் மனிதனை யோசிக்கும் வல்லமையுள்ளவனாகவும், நன்மை, தீமை இன்னது என்பதை பகுத்தறியும் சக்தி உள்ளவனாகவும் படைத்தார் (நீதி. 16:9) ஆம், எதைப் பின்பற்றுவது எவ்வழி நடப்பது என்பதை யோசிக்கும் இதயம் அவனில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஆதி முதல் மனுஷனுக்கு மரண வழிகள் செம்மையானதாகவே தெரிந்துள்ளது. எப்படியென்றால், ஏதேன் தோட்டத்திலிருந்து மரணத்தின் கனி மனிதனின் பார்வைக்கு இன்பமும் புசிப்புக்கு நல்லதுமாயிருந்தது என்று வேதத்தில் உள்ளது. (ஆதி. 3:6) பார்வைக்கு இன்பம் தந்த கனியானது மரணத்தைக் கொண்டு வந்தது. அதேபோல் மனுஷனுடைய பார்வைக்குச் செம்மையாய் தோன்றுகின்ற வழி கூட மரணத்தை உண்டாக்குகிறதென்று ஞானி சாலொமோன் கூறுகிறார் (நீதி : 14:12).

ஆம் பிரியமான சகோதரனே! சகோதரியே! இதுதான் உலகம் குதூகலித்து மனம் தேடும் சுகத்தை அனுபவிக்க இதுதான் தருணம் என்று மனம் போன போக்கிலே போய், இனிமையான வாழ்வு இதுதான் திருப்தியான வாழ்வு இதுதான் என்றும் சொல்லி, பிசாசின் மடியிலே, பாவத்தின் பிடியிலே கிடந்து ஆஹா.... என்ன சுகம் என்று அகம் மகிழும் வாலிபனே!. உன்னை நீயே எண்ணிப் பார். மாறுபாடான இருதயம், தாறுமாறான பாதை இவைகள் எப்போதுமே தேவனுக்கு அருவருப்பானது (நீதி : 4:23).

மாறுபாடான பாதையிலே தாறுமாறாய் மனுஷன் நடப்பதற்குக் காரணமே காவல் இல்லாத இருதயமும் (நீதி. 4:23) மனுஷனால் அடக்கி ஆளப்பட முடியாத மனமும் தான் (நீதி. 16:32) எந்த ஒன்றை இருதயத்தில் வைத்து இச்சிக்கின்றாயோ அது பாவத்துக்கு வழிவகுக்கும் (நீதி. 6:25), இப்படி மாறுபாடான இருதயம் உள்ளவர்கள் நன்மையையும், ஜீவனையும் கண்டடைவதில்லை. மாறுபாடானவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளும் உண்டு என ஞானி சாலமோன் சொல்லுகிறார் (நீதி : 22:5). தன் இருதயத்தின் இச்சையை அடக்க முடியாத மனுஷனின் நிலை என்ன? அது மதிலிடிந்த பாழான பட்டணம் என்கிறார். அதற்குப் பாதுகாப்பில்லை எதிரிகளின் தாக்குதலிலே அது தப்பாது (நீதி. 25:28) ஆகவே, நம்மு டைய இருதயம் அரணான பட்டணம் போல் இருக்க வேண்டும். அந்தகாரத்திலே சிக்குண்ட இருதயமுள்ளவர்கள் உணர்வில்லாதவர்களாய் அசுத்தங்களை ஆவலோடே நடப்பிப்பார்கள் இவர்களுக்கு காரிருளே வைக்கப்பட்டுள்ளது (யூதா. 12,13, 2 பேதுரு : 2:9,10) அன்பான சகோதரர்களே பார்வைக்கு இன்பமாயிருக்கிறது, கேட்பதற்கு சுகமாயிருக்கிறது என்று மாம்சத்தையும், மனசையும் அதற்கு அடிமைப்படுத்திவிடாதே. அதன் முடிவு மரணம் என்பதை அறிந்துகொள்.

**II ஜீவ வழி :** ஒளி ஜீவனுக்கு வழிகாட்டுகிறது. ஆம், கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம். போதக சிட்சையே ஜீவ வழி என்று ஞானி சாலமோன் சொல்லுகிறார். (நீதி : 6.23) இருள் மரணத்துக்கு வழிகாட்டுகிறது ஒளி ஜீவனுக்கு வழிகாட்டுகிறது. நானே உலகின் ஒளி என்று ஆண்டவர் இயேசு உலகத்துக்கு தம்மை காண்பிக்கின்றார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று தம்மை அடையாளப்படுத்துகின்றார். அவருடைய அடிச்சுவடுகளை பின் தொடர்ந்து செல்வதே அவருடைய வழியில் நடப்பதாகும். நாம் இருளில் அகப்படாதபடிக்கு ஜீவ ஒளியின் வழியில் நடக்க வேண்டும். யோவான் : 12:35,36 ஆகவே, இயேசுவைக் கற்றுக் கொண்டு நடப்போமானால் நிச்சயமாக ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளலாம். ஆம், வேதத்தின்படி நடக்கிறவர்கள் உத்தம மார்க்கத்தார் (சங்கீதம் :19:1), அவர்களே ஜீவ மார்க்கத்தில் நடக்கிறார்கள். திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களும், வாக்குத்ததங்களுக்குப் பங்குள்ளவர்களும் இவர்களே. ஆகவே, வாலிபர்களே நாம் ஒருவராலும் அசட்டை பண்ணப்படாமல் கிறிஸ்துவுக்குரியவர்களாகவே நம்மை நாம் அடையாளப்படுத்திக்கொள்ள வார்த்தை யிலும், நடக்கையிலும் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்தி லும், கற்பிலும் மற்றவர்களுக்குச் சாட்சியாக ஜீவிக்க வேண்டும். நம்முடைய விசுவாசம் மாயமற்றதாயிருந்து நாம் வளர்கிறதும், தேறுகிறதும் யாவருக்கும் தெரியவரும் பொருட்டு நம்முடைய விசுவாசம் வெளிப்படையானதாக இருக்கட்டும் (1 தீமோ. 4:12-15).

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள் நம்முடைய பக்தியும், ஆராதனையும். யாருடைய எப்படிப்பட்ட ஐக்கியத்தோடே கூடியது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சுத்த சுவிசேஷத்தோடும், சுத்த இருதயத்தோடும் ஆராதனை செய்கிறவர்களின் ஐக்கியத்தைத் தேட வேண்டும் (IIதீமோ. 2:22, யாக். 1:27) ஆகவே, சத்தியம் என்று பொய்யாய் பேர் பெற்றிருப்பவைகளின்றும் போலியான ஐக்கியத்தினின்றும் நம்மை நாம் விலக்கிக் காத்துக்கொண்டு. கர்த்தருக்கே உரியவர்களாக அவர் பட்சம் நிற்போம்! சிலுவை பாதையே ஜீவப் பாதை என்று அறிந்து சிலுவையை சுமந்து இயேசுவை பின்பற்றுவோம்.

வாலிபனே! நீ எந்த பாதையை தேர்ந்தெடுத்திருக்கிறாய்? ஜீவ பாதையில் ஓடுகிறாயா? நித்திய ஜீவனை நோக்கித்தான் ஓடுகிறாயா? என்பதை யோசித்துப்பார். உன் கண்கள் ஜீவ பாதையை நேராய் நோக்கக்கடவது. கண்களின் பார்வை சிதறுகின்ற போது பாதையும் மாறும். (நீதி 4:25) மகனே! உன் இருதயத்தை எனக்குத்தா என்று அழைக்கும் தேவனுடைய குரலைக் கேட்டு உன் கண்கள் அவர் வழியை நோக்குவதாக, சங்கீதக்காரன் தாவீதைப் போல நம்முடைய இருதயத்தை தேவனுக்கு முன்பாக ஒப்புக் கொடுப்போம். வேதனையுண்டாக்கும் இருளின் வழியிலிருந்து விடுதலையாவோம்! (சங். 139:23,24).

உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு இளவயதும், வாலிபமும் மாயையே (பிரசங்கி. 11:10)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.


**K. சேகர், திருப்பூர்.**

## கிறிஸ்துவுக்குள் எப்படி இருக்கிறோம் ?

| | |
|---|---|
| 1. அவருக்குள் நடக்கிறோம் | கொலோ 2:6 |
| 2. அவருக்குள் வேர் கொண்டுள்ளோம் | கொலோ 2:7 |
| 3. அவருக்குள் கட்டப்பட்டுள்ளோம் | கொலோ 2:7 |
| 4. அவருக்குள் பூரணமாக்கப்படுகிறோம் | கொலோ 2:10 |
| 5. அவருக்குள் மரித்துள்ளோம் | கொலோ 2:20 |
| 6. அவருக்குள் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளோம் | கொலோ 3:1 |
| 7. அவருக்குள் மறைந்துள்ளோம் | கொலோ 3:3 |

சிறுவர் பகுதி

# தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை பாருங்கள் !



எனக்குப் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை இந்த இதழின் மூலமாக சந்திப்பதில் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த மாதம் தேவன் நமக்கு என்ன பாடம் கொடுக்கிறார் என்று பார்ப்போமா?

உங்களுக்கு யோசேப்பை பற்றி தெரியுமா? பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு பயந்து அவருக்கு பிரியமாய் வாழ்ந்தவர்களில் ஒருவர். அவனுடைய சகோதரர்கள் அவனுக்கு விரோதமாக காரியங்களை செய்தார்கள். ஆனால், உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? யோசேப்பு மற்ற மகன்களை காட்டிலும் தகப்பனுக்கு பிரியமான செல்லப்பிள்ளை. ஒருநாள் தேவன் அவனுக்கு கனவை காண்பித்து அதில் தன் தானிய கட்டுகளின் முன்பாக தன் மற்ற சகோதரரின் தானிய கட்டுகளின் குனிந்து பணிந்தது போல காண்பித்தார்.

இவனும் அதை தன் சகோதரருக்கு சொல்ல, ஏற்கனவே இவனை வெறுத்த சகோதரர்கள் இன்னும் வெறுத்தார்கள். ஒரு சமயத்தில் அவனை பிடித்து எகிப்துக்கு போய்க் கொண்டிருந்த சிலரிடத்தில் அவனை விற்றுப் போட்டார்கள். அங்கே எகிப்தில் அவன் அடிமையாய் இருந்தான்.

இது போதாதென்று மகா ராணியினாலே பொய் குற்றச் சாட்டு சாட்டப்பட்டு அவன் சிறையில் அடைக்கப் பட்டான். ஆக மொத்தம் தன் சகோதரர்களாலும், மற்றவர் களாலும் அவன் மிகுந்த பாடுகளுக்குள்ளானான்.

பிறகு யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் செய்த தவறை உணர்ந்து, எகிப்திலிருந்த யோசேப்பை பார்க்க சென்றனர். அவர்கள் என்ன நினைத்துப் போனார்கள் தெரியுமா? ஆதி : 50:15 ல் ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்கு செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்கு சரிக்குச் சரி கட்டுவான் என்று சொல்லிக்கொண்டார்கள். இந்த இடைபட்ட காலத்தில் கர்த்தர் யோசேப்பை ஆசீர்வதித்து அவனை உயர்த்தினார்.

சரி, இப்பொழுது நான் கேட்கிறேன் ! நீங்கள் யோசேப்பாக இருந்தால் என்ன செய்வீர்கள்? உங்களை கொடுமைப்படுத்தினது போல் அவர்களையும் கொடுமைப்படுத்தியிருப்பீர்களா? அல்லது சிறையில் அடைத்திருப்பீர்களா? ஆனால் நம் யோசேப்பு என்ன செய்தான் என்று தெரியுமா? நான் மேற்சொன்ன எதையும் அவன் செய்யவில்லை. அதற்கு பதிலாக அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் அவன் தன் செல்வத்தை வைத்து அன்போடு பராமரித்தான்.

ஏன் இவ்வளவு அன்பாக யோசேப்பு அவர்களை கவனித்தான். யோசேப்பு என்ன சொல்கிறான் என்று பாருங்கள். ஆதி (50:19-20) ல் யோசேப்பு அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் : நான் தேவனா? நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படி அதை நன்மையாக முடியப்பண்ணினார் என்று கூறியிருக்கிறான். இதை வேறுவிதமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் யோசேப்பு தேவன் மேல் நோக்கமாயிருந்தான். தன் மீது அவன் நோக்கமாயிருக்கவில்லை. தன் சகோதரர்களை வெறுப்பதற்கு பதிலாக, தேவன் எப்போதும் தன்னோடிருந்த காரியத்தை உணர்ந்தான். தன் சகோதரர் செய்தது தவறாயிருந்தாலும் அதனாலே தேவன் தனக்கு நல்லதை செய்தார் என்று அறிந்து, அவன் தன் சகோதரருக்கும் நல்லது செய்தான். என்ன ! இப்படியும் ஒருவன் வாழ்ந்திருக்கிறார் என்று ஆச்சரியமாக உள்ளதா? நாம் பின்பற்றுவதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். உங்களிடம் யாராவது தவறாக நடந்து கொண்டால் நீங்களும் திரும்ப அவர்களுக்குத் தீமை செய்யாமல், நீங்கள் அன்பாயிருந்து தேவன் அதை உங்களுக்கு நன்மையாக முடியப்பண்ணும்படி காத்திருங்கள். ஒருவேளை நீங்கள் ஆச்சரியபடத்தக்க அளவுக்கு உங்களுக்கு நன்மை உண்டாக தேவன் கிரியை செய்வார். சரியா?

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !

**Abel R. Nayagam.**

## வேதாகமத்தில் கிறிஸ்து அழைக்கப்பட்டவிதம்

1. *பிந்தின ஆதாம்* *(I கொரி 15:45)*
2. *அல்பாவும் ஒமேகாவும்* *(வெளி 22:13)*
3. *அப்போஸ்தலர்* *(எபி 3:1)*
4. *மத்தியஸ்தர்* *(I தீமோ 2:5,6)*

# அப்போஸ்தலருடைய நடபடிகள்

(லூக்காவால் எழுதப்பட்டது)

முன்னுரை :

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மிகவும் முக்கியமான புத்தகம். ஏனென்றால் இப்புத்தகம் கி.பி. 33 லிருந்து கி.பி. 62 வரையிலான கர்த்தருடைய சபையின் ஆரம்பத்தையும், வரலாற்றையும் கொடுக்கிறது.

சபை திறக்கப்படுவதற்கான திறவுகோல் கொடுக்கப் பட்டிருந்த பேதுரு தான், முதல் பன்னிரெண்டு அதிகாரங்களின் முக்கிய கதாப்பாத்திரமாய் இருக்கிறார் (மத்தேயு 16:18-19). அதைப்போலவே பதிமூன்று தொடங்கி இருபத்தெட்டு வரையிலான அதிகாரங்களின் முக்கிய கதா பாத்திரமாய் பவுலடியார் இருக்கிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மனமாற்ற சம்பவங்களின் புத்தகம் என மிகச் சரியாக அழைக்கப் படுகிறது. ஏனென்றால், இந்த புத்தகத்தில் ஆயிரக்கணக் கானோர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததை நாம் வாசிக்கிறோம். இந்தப் புத்தகம் பவுல் ரோமாபுரியில் இருப்பதோடு முடிவடைகிறது. அவர் அங்கே இருந்து கொண்டு தான் எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன் போன்ற சிறை நிருபங்களை எழுதினார். கொலோசெயர் 1:23 ல் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப் பட்டு வருகிறது என்று சொன்னார். உண்மையாகவே இந்த சகோதரர்கள் உலகத்தைக் கலக்கி இருக்கிறார்கள் (அப்17:6).

இந்தப் புத்தகம் அப்போஸ்தலனாகிய பவுலின் மூன்று சுவிசேஷ பிரயாணங்களை பதிவு செய்திருக்கிறது. முதலாம் சுவிசேஷப் பிரயாணம் அப் 13:14 ல் தொடங்குகிறது; இரண்டாம் சுவிசேஷப் பிரயாணம் அப் 15:36 ல் தொடங்கி, 18:22 ல் முடிவடைகிறது; மூன்றாவது சுவிசேஷப் பிரயாணம் 18:23 ல் தொடங்கி, 21:12 ல் முடிவடைகிறது. கீழ் காண்பவைகள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் ஒவ்வொரு அதிகாரத்திலும் இடம் பெற்றுள்ள முக்கிய சம்பவங்களின் பட்டியல்.

1. கிறிஸ்து பரமேறுதல்
2. சபையின் ஆரம்பம்

3. சப்பாணியை சுகப்படுத்துதல்.
4. பேதுருவும், யோவானும் எருசலேமில் பிடிக்கப்படுதல்.
5. சபையில் முதல் பாவம் - அனனியா மற்றும் சப்பீராள்
6. சபையில் முதல் பிரச்சனை - ஏழு விசேஷித்த வேலை ஆட்கள் நியமிக்கப்படுதல்.
7. ஸ்தேவான் கல்லெறியப்படுதல்.
8. எத்தியோப்பிய மந்திரி மனமாற்றம் அடைதல்.
9. தர்சு பட்டணத்தைச் சேர்ந்த சவுல் மனமாற்றம் அடைதல்
10. கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டார் மனமாற்றம் அடைதல்.
11. முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்படுதல்.
12. ஏரோது ராஜா யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை கொலை செய்தல்.
13. முதல் சுவிசேஷப் பிரயாணத்தின் ஆரம்பம்.
14. லீஸ்திரா, இக்கோனியா மற்றும் அந்தியோகியாவில் மூப்பர்கள் நியமனம்.
15. விருத்தசேதனம் குறித்து எருசலேமில் ஆலோசனைக்கூட்டம்.
16. பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரனும், அவனுடைய வீட்டார் அனைவரும் மனமாற்றம் அடைதல்.
17. பவுலின் புகழ்பெற்ற மார்ஸ் மேடை பிரசங்கம்.
18. கொரிந்தியர்கள் மனமாற்றம் அடைதல்.
19. எபேசு பட்டணத்தில் மீண்டும் ஒரு ஞானஸ்நானம் பெறுதல்.
20. வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் கர்த்தருடைய பந்தி கடைப்பிடித்தல்.
21. எருசலேமில் பவுல் சங்கிலிகளினாலே கட்டப்படுதல்.
22. எருசலேமில் பவுல் உத்தரவு சொல்லுதல்.
23. பவுலை கொலை செய்வதற்கு நாற்பது பேருக்கு அதிகமானோர் சரி செய்தல்.
24. ரோம தேசாதிபதியாகிய பேலிக்ஸ்க்கு முன்பாக பவுல்.
25. ரோம தேசாதிபதியாகிய பெஸ்துவுக்கு முன்பாக பவுல், ராயருக்கு அபயமிடுதல்.
26. அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக பவுல்.
27. ரோமாபுரிக்கு கப்பல் பிரயாணமும், எதிர்காற்றும்.
28. பவுல் ரோமாபுரிக்கு வந்து சேருதல்.

**Ken Tyler** **Benny Martin**

# நாம் எல்லோரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுகிறோமா?

அநேகர், கர்த்தருக்கு கீழ்ப்படிகிற எல்லோரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுகிறார்களென்றும் அதை அவர்கள் பெற்றே ஆக வேண்டும் என்றும் நம்புகிறார்கள். இதை நம்பிக் கொண்டு இது அப்போஸ்தலர்கள் தங்கள் நாட்களில் செய்தது போல அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுக்கிறது என்றும் முடிவுக்கு வருகிறார்கள். இதை அவர்கள் ஒத்துக் கொள்வதற்கும், மற்றவர்களை ஒத்துக்கொள்ள வைப்ப தற்கும் அப். 2:1-4ல் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றது போல அப் 1:15ல் 120 விசுவாசி களும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என நிரூபிக்க முயற்சி செய்கிறார்கள்.

**தயவு செய்து கீழ்வரும் கேள்விகளையும், பதில்களையும் ஆழமாக சிந்தித்துப் பாருங்கள்**

***நம்முடைய கர்த்தர் இந்த உலகத்தை விட்டு கடந்து செல் வதற்கு முன்பாக தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியான வரை யாருக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்?.***

**பதில் :** அப்போஸ்தலர்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, கிறிஸ்து இப்படியாகச் சொன்னார் " பிதாவினிடத்தி லிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்தி லிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும் போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதி முதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். இங்கே கவனியுங்கள். அந்த 120 பேரில் ஒருவர் கூட ஆதி முதல் கிறிஸ்துவுடனே கூட இருக்க வில்லை " (யோவான் 15:26, 27).

மறுபடியும், இயேசுவோடு கூடியிருந்த பதினொரு அப்போஸ்தலர்களிடம் அவர் பேசும்போது *இந்த சம்பவம் இயேசு பரமேறுவதற்கு முன்பாக ஒலிவ மலையில் நடந்த சம்ப வம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.* இப்படியாகச் சொன்னார். " என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்பு கிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக் கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக்கா 24:49) அப் 1:8 யும் வாசித்துப்பாருங்கள்.

***அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்றாம் அதிகாரத்தில் அந்த 120 பேரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்களா?***

அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் ஒன்று மற்றும் இரண்டு அதிகாரங்களை ஒருவர் வாசிக்கும்போது இந்த அதிகா ரங்களின் மைய கதாபாத்திரம் அப்போஸ்தலர்கள் தான் என்பதைக் காணமுடியும். பழங்காலத்து அசல் தோல்ச் சுருள்களில் அதிகாரங்கள், வசனங்கள் எனப் பிரிக்கப்படாமல் எல்லாம் ஒன்றாகத் தான் இருந்தது. இப்போது நம்முடைய கைகளில் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில் அப் 1:26ல்

மத்தியா யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக தெரிந்தெடுக்கப் பட்டு பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப் பட்டான். இதற்குப் பிறகு இரண்டாம் அதிகாரம் எனப்பிரிக்கப் பட்டு இப்படியாக நாம் வாசிக்கிறோம். "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (2:1,4).

அதைக்கேட்ட எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? என்று கேட்டார்கள் (2:7). அந்த 120 பேர் எல்லோருமே கலிலேயர்களாயிருந்திருக்க முடியாது, ஆனால் அப்போஸ்தலர்கள் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இவர்களுக்குத் தான் வாக்குதத்தம் பண்ணப்பட்டது. இவர்கள் தான் பரிசுத்த ஆவியின் வரத்தை அற்புத விதமாகப் பெற்றுக்கொண்டார்கள்.

*அப். 2:38ல் திரளான ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் வரமும், அற்புத அடையாளங்கள் செய்ய வல்லமையுள்ள பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் ஒன்றா?*

இல்லை. இது கீழ்ப்படிந்தவர்களுக்குள்ளே ஆவிக்குரிய ஜீவன் புதுப்பிக்கப்படுகிற ஒரு நிகழ்வாகும். வேத வசனங்களின் அடிப்படையில் ஞானஸ்நானம் பெறும் யாவரும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவார்கள் (அப் 5:32).

*சில மக்கள் பெந்தெகொஸ்தே நாளிலே எல்லா விசுவாசிகளுமே அற்புத அடையாளங்கள் செய்யத்தக்கதாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், அப் 6:3-6 வசனங்களில் ஒரு விசேஷித்த* வேலைக்காக ஏழு சீஷர்கள் மேல் அப்போஸ்தலர்கள் ஏன் கைகளை வைத்து ஜெபம் பண்ண வேண்டியதாயிருந்தது?

பதில் : உண்மையில், அப்போஸ்தலர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தனர். மற்றவர்கள் எல்லோரும் தண்ணீர் ஞானஸ்நானம் மாத்திரம் பெற்றார்கள். அதன் விளை வாக பாவ மன்னிப்பைப் பெற்றார்கள். அது மாத்திரமல்ல பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயங்களில் வாசம் செய்தார். எனவே, அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமை இருந்தது. அப்.1:15 ல் நாம் பார்க்கின்ற 120 சீஷர்களோ அல்லது அப். 2:41 ல் நாம் பார்க்கின்ற 3000 ஜனங்களோ அப்போஸ்தலர்கள் பெற்றது போல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறவில்லை.

ஆயினும், அப். 6:1-8 வசனங்களில் நாம் பார்க்கும் போது பந்தி விசாரணை செய்ய ஏழு பேரை தெரிந்தெடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் சொன்னபோது அந்த ஏழு பேரும் " நற்சாட்சி பெற்றவர்களும், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்களுமாய் காணப்பட வேண்டும் என்று சொன்னார்கள்..... " அந்த ஏழுபேரும் அப். 2:38ல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியின் வரத்தை ஏற்கனவே பெற்றிருந்தார்கள்

என்பது தெளிவாகிறது. ஆனால், பரிசுத்த ஆவியின் மூலமாக அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்க வில்லை. இந்த ஏழு பேரும் தெரிந்தெடுக்கப்பட்டு அப்போஸ் தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபம் பண்ணின போது தான் அந்த ஏழு பேரும் அற்புத அடையாளங்கள் செய் யும் வல்லமையைப் பெற்றார்கள் (அப். 6:8; 8:5,6).

***இன்றைய நாட்களில், கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தைப் பெறுகிறார்களா?***

**பதில் :** இல்லை, ஏனென்றால் அந்த விசேஷித்த ஞானஸ் நானமானது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே வாக்குதத்தம் செய்யப்பட்டு அவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. (இது யூத ஜனங்களுக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டது) அதைப் போல கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாருக்கும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் புறஜாதிகளையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார் என்பதற்கு அடையாளமாக கொடுக்கப் பட்டது (அப். 10 ஆம் அதிகாரம்). இதைத் தவிர, வேறு யாரும் இந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதாக நமக்கு வசனங்களில் ஏதும் இல்லை. அப்போஸ்தலர்கள் குறிப்பிட்ட சிலரை தெரிந்தெடுத்து அவர்கள்மேல் கைகளை வைத்து அற்புத அடை யாளங்கள் செய்யும் வல்லமையை அவர்களுக்கு கொடுக் கலாம், ஆனால், அவர்கள இந்த வரத்தை வேறு யாருக்கும் கொடுக்க முடியாது (அப். 6:6; 8:14-17). இந்த உண்மையை நாம் அப் 5:12ல் காண்கிறோம். “ அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது ”. “ அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்பட்டது. (அப் 8:18). பரிசுத்த ஆவியினால் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையானது முதல் நூற்றாண்டில் சபை குழந்தை பருவத்தில் இருந்த போது புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டி ருந்த போது வேத வாக்கியங்களை உறுதிப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது.

***இன்றைய நாட்களில் ஜனங்கள் ஞானஸ்நானம் பெறும் போது எதைப் பெற்றுக் கொள் கிறார்கள்?***

**பதில் :** நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது நமக்கு வாக்கு தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகி றோம். தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருப்பதால் நமக்கு ஆவிக்குரிய ஜீவன் கிடைக்கிறது (அப் 2:38; ரோமர் 8:9-11) இதற்கும் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமைக்கும் எந்த சம்மந்த மும் இல்லை.

*இன்றைய நாட்களில் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை நாம் ஏன் பெற்றுக் கொள்வதில்லை?*

ஏனென்றால் நம்மை வழி நடத்த உறுதிபடுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தை நம்மிடம் இருக்கிறது (மாற்கு 16:20; யோவான் 20:30,31). மேலும், விசுவாசம் கேள்வியினாலே வரும் (ரோமர் 10:17), அற்புத அடையாளங்களை காண்பதி னால் அல்ல.

**J.C. Choate** **Benny Martin**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 5. பவுலின் இரண்டாம் சுவிசேஷப்பயணம்

### I சுவிசேஷத்தின் கதவை தேவன் திறந்தருளினார்

பவுல் இரண்டாம் சுவிசேஷப் பயணத்தை அந்தியோகியா விலிருந்து துவக்கினார். அவரோடு சீலா என்ற இளைஞனைத் தெரிந்து கொண்டு அழைத்துச் சென்றார். (அப். 15:40,41) அவர் கள் சீரியா, சிலிசியா, தெர்பை மற்றும் லீஸ்திராவுக்கு போனார்கள். அங்கே தீமோத்தேயு என்ற இளைஞனையும் தெரிந்து கொண்டு அவர்களோடு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் பட்டணங்கள் தோறும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். தேவன் அவர் களுக்கு சுவிசேஷத்தின் கதவை திறந்தருளினார் (2 கொரி 2:12).

அருமையானவர்களே, கதவு என்பது வாய்ப்பு என்பதா கும். தேவன் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்திற்குக் கீழ்படியும் படி வாய்ப்புகளைக் கொடுக்கின்றார். நோவா என்ற தேவ மனித னின் காலத்தில் (கி.மு. 2948-1998) ஜனங்களின் அக்கிரமம் பெருகியிருந்தன. ஆதலால் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது (ஆதி 6:5,6) எனவே, அப்போ திருந்த உலகத்தை ஜலத்தினால் அழிக்க சித்தமானார்! நோவா வுக்கு கர்த்தருடைய கண்களிலிருந்து கிருபை கிடைத்தது! நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்த மனுமாயிருந்தான் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் (ஆதி 6:7-9) எனவே தேவன் நோவாவைத் தெரிந்து கொண்டு அப்போதிருந்த ஜனங்களுக்கு தேவ நீதியைக் குறித்தும், ஜலப் பிரளயத்தினால் இந்த உலகம் அழியப்போவதைக் குறித்தும் பிரசங்கித்து அந்த அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையைக் கட்டினார். அந்த ஜனங்களுக்கு பேழையின் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதாவது வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வாய்ப்பை நோவாவும் அவரது குடும்பத்தினரும் மற்றும் மாம்ச ஜந்துக்கள் மட்டுமே பெற்றுக்கொண்டன மற்றவர்களோ அதைக் குறித்து உணராமல் இருந்தார்கள் (ஆதி 7:15,16, மத். 24:38,39) தேவன் அவர்க ளுக்குக் கொடுத்த வாய்ப்பை முடித்துக்கொண்டார். பேழையின் கதவை அடைத்தார்.

இன்று சுவிசேஷத்தின் கதவை திறந்து வைத்துள்ளார். இந்த வாய்ப்பை ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுவிசேஷத்தின் கதவு அடைக்கப்படும் நாளையும், அதன் வேலை

யும் நாம் அறியாதபடியால் இன்றே சுவிசேஷத்திற்குக் கீழ்படிய வேண்டும். இதோ இப்பொழுதே அநுக்கிரகக் காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் (2கொரி 6:2) நேற்று என்பது நம்மிடமில்லை நாளை என்பது வெறும் கனவு இன்று என்பது மட்டுமே உண்மை யாக உள்ளது. எனவே, இன்றே கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (எபி 3:15) ஏனென்றால், சுவிசேஷத்தின் கதவு இன்று திறந்திருக்கிறது.

**II பவுல் கட்டப்படுகிறார்! ஆனால் சுவிசேஷம் கட்டப்படவில்லை!!**

பவுலும் அவரோடிருந்தவர்களும் பிலிப்பி பட்டணத் திற்குப் போனார்கள் அங்கே ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுவதற்குக் கூடி வந்த ஸ்திரீகளுக்கு சுவிசேஷத்தைச் சொன் னார்கள். அப்பொழுது பக்தியுள்ள லீதியாள் என்ற ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள். தேவன் அவள் இருதயத்தைத் திறந்தார். அவளும், அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்று விசுவாச முள்ளவர்களானார்கள் (அப். 16:12-15) அதன்பின்பு அங்கே ஒரு அப்பாவிப் பெண்ணை குறி சொல்லுகிற ஆவி பிடித்திருந் தது அவள் குறி சொல்லி தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத் தை உண்டாக்கினாள். அவள் அசுத்தாவி பிடித்திருக்கிறவளாக இருந்தாள். அவள் பவுலையும் அவரோடிருந்த ஊழியக்காரர்க ளையும் பின் தொடர்ந்து வந்து " இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் " என்று சத்தமிட்டாள் (அப். 16:16,17) இவளின் இந்த அறிக்கை நமக்கு வியப்பூட்டுவதாக இல்லை! ஏனென்றால் கதரேனருடைய நாட்டில் இயேசுவை உன்னதமான தேவனுடைய குமாரன் என்று சொன்ன அசுத்தாவியுள்ள மனித னை நாம் அறிந்திருக்கிறோம் (மாற்கு 5:7) மேலும் யாக்கோபு பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன என்று கூறுகிறார் (யாக் 2:19) ஒவ்வொரு நாளும் பவுலும் அவரது சக ஊழியர்களும் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் அவள் வந்து தொந்தரவு கொடுத்து வந்தாள். பவுலினால் அவளின் தொந்தரவு தாங்க முடியாமல் " பவுல் சினங்கொண்டு திரும்பிப் பார்த்து நீ இவளை விட்டுப்போகும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் " என்று அசுத்தாவியிடம் சொன்னார். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று (அப் 16:18). அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயம் அற்றுப் போயிற்று என்று கண்டு பவுலையும், சீலாவையும் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்கள் பவுலையும், சீலாவையும் குறித்து அதிகாரிகளிடத்தில் யூதர்க ளாகிய இந்த மனுஷர்கள் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி, தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்று தவறானவைகளைச் சொன்னார்கள். ஜனக்கூட்டம் ஊழியக்காரர்க ளுக்கு எதிராக எழும்பினார்கள் அதிகாரிகள் பவுலையும், சீலாவையும் பிடித்து

அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப் போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி சிறைச்சாலையிலே வைக்கவும் கட்டளை யிட்டனர் (அப் 16:19-23) குற்றவாளிகள் நிர்வாணமாக்கப் பட்டு தலை முதல் கால் வரை தடியால் அடிக்கப்படுவார்கள். அப்படியே பவுலையும், சீலாவையும் செய்து அடித்தனர்.

பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அநேக அடிகளை வாங்கிக் கொண்டு தங்கள் கால்கள் கொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்ட நிலையில் நடுராத்திரியிலே ஜெபம் பண்ணி தேவ னைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இங்கே பவுல் கட்டப்பட்டி ருக்கிறார். ஆனால், சுவிசேஷம் கட்டப்படவில்லை என்பதை அறிகின்றோம் (அப். 16:24,25) பவுல் முதன் முறையாக புற ஜாதிகளினால் துன்புறுத்தப்பட்டு சிறைச்சாலைக்குச் சென்றார் அங்கே தைரியமாக தேவனைத் துதித்து பாடுகின்றார். அதன் மூலமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கின்றார்!.

அன்பானவர்களே, நாமாக இருந்தால் நள்ளிரவில் சிறையில் என்ன செய்து கொண்டிருப்போம். கதறிக்கொண்டு இருப்போம், முறுமுறுத்துக் கொண்டு இருப்போம். இனி வேண் டாம் இந்த கிறிஸ்தவ வாழ்க்கை என்று சொல்லிக் கொண்டிருப் போம். முடிவில் நாமும் கட்டப்பட்டு இருப்போம் சுவிசேஷமும் கட்டப்பட்டிருக்கும். ஆனால், பவுலும், சீலாவும் அப்படிப்பட்ட வர்களல்ல தங்கள் உடலில் அடி வாங்கிய காயங்களுடன் அதைக் குறித்து எண்ணாமல் சுவிசேஷத்தை அறிவிக்கின்றார்கள்.

**III. சுவிசேஷம் வல்லமையுள்ளதாக உள்ளது**

சுவிசேஷத்தினிமித்தம் பவுல் பிலிப்பி பட்டணத்தில் சிறை யில் அடைக்கப்பட்டார். ஆனால், சுவிசேஷம் அடைக்கப்படா மல் சிறையிலுள்ள அநேகருக்கு வல்லமையுள்ளதாக இருந்தது. எனவே, தேவன் பவுல், சீலா ஆகியோரின் ஜெபத்திற்கு பதில் கொடுக்க விரும்பினார்.

உடனே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படி யாக பூமி அதிர்ச்சி உண்டாயிற்று இது ரிக்டர் அளவில் எவ்வள வாய் பதிவாகக் கூடும் என்பதை நாம் அறிவதில்லை ஆனால், சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசைந்தது என்றும் உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று என்றும் கூறுவதால் இது மாபெரும் பூமி அதிர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். இது பவுலின் நள்ளிரவில் தேவனைத் துதித்து ஜெபம் பண்ணப்பட்டதின் பதிலுரையாக தேவன் பரலோகத்திலிருந்து இந்த அற்புதத்தைச் செய்தார் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை!.

பூமி அதிர்ச்சியினால் அசைந்த சிறைச்சாலை இருளில் மூழ்கியது அதாவது அந்நாளில் தீப்பந்தம் போன்ற விளக்குகள் கீழே விழுந்து அணைந்து கொண்டிருக்கிறது. உடனே சிறைச் சாலைக் காரன் கைதிகள் எல்லாம் ஓடிவிட்டார்கள் என நினைத்து தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தான். உடனே பவுல் மிகுந்த சத்தமிட்டு நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம் என்றார் (அப். 16:28) இந்த அற்புதமான காட்சியைக் கண்ட சிறைச்சாலைக் காரன் “ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்” என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி அவனுக்கும் அவன் வீட்டி லிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலே தானே.. அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். அவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான் (அப் 16:30-34).

இந்த சம்பவத்தின் மூலமாக சுவிசேஷமானது எவ்வளவு வல்லமையுள்ளதாக இருக்கிறது என்று நாம் அறிகின்றோம். தேவன் சுவிசேஷத்தின் கதவை திறக்கின்றார். சுவிசேஷம் கட்டப் படாமல் அது வல்லமையுள்ளதாக இருக்கிறது என்று உணருகிறோம். எனவே தான் பவுல் “கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது” என்றார் (ரோமர் 1:16).

இதை வாசிக்கும் அன்பான வாசகரே நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தீர்களா? அப்படியில்லையென்றால் உடனே சுவிசேஷத்திற்குக் கீழ்படியுங்கள் உங்களுடைய வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்படும். ஏனென்றால் கிறிஸ்துவின் சுவிசேஷம் வல்லமையுள்ளது.


**Bro. பாஸ்கர்** (தொடரும்)


## நேபுகாத்நேச்சார் கண்ட கனவின் இரகசியம்

*1. பசும்பொன் – பாபிலோன் அரசு [தானி 2:38]*
*2. வெள்ளி – மேதிய பாரசீகம் அரசு [தானி 2:39]*
*3. வெண்கலம் – கிரேக்க அரசு [தானி 2:39]*
*4. இரும்பு – ரோம அரசு [தானி 2:40]*

# BIBLE MEDITATION

**TV PROGRAM**



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

திருமறை ஆசான்
இதழ் ஆசிரியரின்
**திருமறை தியானம்**
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7.15 மணி
தமிழன் TV திங்கள் காலை 7.00 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/ மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.